# கனவுப் பூக்கள்

சௌமினி –
சிவம் –

# கனவுப் பூக்கள்

(புதுக் கவிதைத் தொகுதி)


— சௌமினி —

— சிவம் —



சிவகவி பிரசுரம்

கோப்பாய்.

1975

முதற்பதிப்பு: மார்ச் 1975

உரிமை: ஆசிரியர்களுக்கே.

வெளியீடு: சிவகவி பிரசுராலயம், கோப்பாய்.

தொடர்புகளுக்கு:

செல்வி, சௌமினி பஞ்சாட்சர சர்மா
திரு. ப. சிவானந்தசர்மா (சிவம்)
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

*

# KANAVUPPOOKKAL

(A Collection of Poems)

Authors:

Miss. SOWMINI PANCHADSARA SARMA,
Mr. P. SIVANANDA SARMA (SIVAM)

Publishers:

SIVAKAVI PIRASURALAYAM,
KOPAY.

First Edition: MARCH 1975

# —❋ சௌமினி ❋—



கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை
677/9, கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்

என்
நெஞ்சக் குளத்தினிலே
நித்தம் மலர்ந்தவற்றுள்
எண்ணிச் சிலவற்றை
உங்கள் முன்
தொடுத்து வைத்தேன்
இந்தச்
சின்ன மலர்களெலாம்
உங்கள் உளந்தனிலே
என்றும் இடம் பிடிக்கும்
அவை
நின்று மணம் பரப்பும்!



# அறிமுகம்

1967ல் ஒரு கவிதையுடன் எழுத்துலகில் புகுந்த செல்வி, சௌமினியின் சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை என்பன மல்லிகை, சிரித்திரன், கலசம், ஈழநாடு, வெற்றிமணி, கலை அருவி, ரோஜாப்பூ, மலர், ஜோதி, சுதந்திரன், ஐக்கியதீபம், சிலம்பொலி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

சிறுகதை, கவிதை, நாடகப் போட்டிகளில் பங்குபற்றிப் பல பரிசுகளைப் பெற்றுக்கொண்ட இவரின் சிறுகதைகள் யதார்த்தக் கண்ணோட்டத்துடன் எழுதப்பட்டவை என்ற பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டவை.

இவரின் மெல்லிசைப் பாடல்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி வருகின்றன.

தமது கவிதைகளை நூலுருவில் தொகுத்து வெளியிடும் முதற் பெண் கவிஞர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கை

எங்கோ வெகு தொலைவில்
அணையாத தீபத்தின்
மங்காத ஒளிச்சுடர்கள்
மலராகித் தெரிகிறது
எங்கோ வெகு தொலைவில்
இன்பம் தருங் கீதம்
தங்காமல் காதுகளில்
தேனாகப் பாய்கிறது

நம்பிக்கைப் பூக்கள்
நலமாக மலரட்டும் !

# என்பேர் நிலைத்திருக்கும்

என்றோ ஒரு நாளில்
உலகம் எனையறியும்
உண்மை உணர்வுகளை
ஒருநாள் புரிந்து கொள்ளும்
அன்றே இவ்வுலகில்
என் பேர் நிலைத்திருக்கும்

# சுவடுகள்

நான் செல்லும் பாதையெல்லாம்
பெருமுட்கள்
நிறைகற்கள்
காலெடுத்து வைப்பதற்கோ
சிறிதும் இடமில்லை
ஆயினும்
நான் நடந்து போனதன் பின்
என் பாதை நடப்பவர்க்கு
நல்லதொரு பாதையினை
என் கால்கள் சமைத்திருக்கும் !

நான் கேட்கும் வார்த்தை எலாம்
வசை மொழிகள்
சுடு சொற்கள்
இன் சொற்கள் காதினிலே
விழுவதற்கே வழியில்லை
ஆயினும்
நான் கேட்டுச் சலித்ததன் பின்
என் நாவில் வரும் வார்த்தை
கேட்பவரின் செவிகளிலே
இன்பத்தேன் சிந்தி நிற்கும் !

நான் காணும் கனவில் எலாம்
நீள் அழுகை
நெடுந் துயரம்
இன்பத்தின் நிழல் கூட

சிறிதும் நுழைவதில்லை
ஆயினும்
என் கனவின் விழிப்பினிலே
பிறர் காணும் கனவு எலாம்
அழுகைப் பெருந்துயர்கள்
இல்லாத பொற்கனவு !

நான் வாழ நினைக்கின்ற உலகிலெல்லாம்
தீராத பிரச்சினைகள்
போராட்டங்கள்
நிம்மதியின் அணைப்பு அங்கு
சிறிதும் இருந்ததில்லை
ஆயினும்
நான் வாழ்ந்து முடிந்ததன் பின்
என் வாழ்க்கைத் தடங்கள் ஒரு
பொன்னான புது உலகைப்
புதிதாக ஆக்கி வைக்கும் !

★

# கண்ணீர் மலர்கள்

என்னிடம்
நீ
வருகின்ற வேளைகளில்
அன்புடன்
எனக்கு அளிப்பதற்கு
கண்ணீர் மலர்களினைக்
கொண்டு வருவாய் என
நான்
காத்திருந்தேன்
நீ
வந்தாய்
ஆனால்
கை நிறைய மணம் நிறைந்த
மலர்களினைக் கொண்டு வந்தாய்...
இதனால் நான் மகிழ்ச்சியடைவேன்
என்று நினைத்தாயா ?
உனக்கு ஒரு கதை நினைவு இருக்கிறதா ?
மீன் வாடையில் படுத்து உறங்கும்
மீனவப் பெண்களுக்கு
மலர் மணத்தில்
உறக்கமே வரவில்லையாம் !

✱

என்னிடம்
வருபவர்கள் எல்லாம்
எனக்கு

என்றும் அளிப்பது
கண்ணீர் மலர்களைத்தான்
அவைகளையே பார்த்து
அவைகளையே முகர்ந்து
அவைகளையே ரசித்து
எனக்கு
அவைகள் தான் மிகவும்
பிரியமானவை ஆகிவிட்டன...
உலகத்தில் உள்ள
எல்லா மலர்களிலும்
நான் விரும்புவது -
கண்ணீர் மலர்களைத்தான்...
ஆனால் நீயோ -
கை நிறைய மணம் வீசும்
மலர்களுடன்
என்னைக் காண
வந்திருக்கிறாய்

★

இதனால் நான்
மகிழ்ச்சியடைவேன்
என்று நினைத்தாயா ?
அந்தப் பெண்களின் கதை
உனக்கு நினைவு வருகிறது அல்லவா ?
நீ

இனி என்னிடம்
வரும்போது எல்லாம்
கண்ணீர் மலர்களினை
தாராளமாகச்
சுமந்து வா -
என் பாதையிலே
அவைகளை நீ
மெதுவாகத்
தூவி வை -
எனக்குப் பிரியமான
அந்த மலர்களின் மீது
நடந்துதான்
நான்
உன்னிடம்
வர விரும்புகிறேன்.

# துரதிர்ஷ்டம்

‘அதிர்ஷ்டம் வந்து
உன்
வீட்டுக் கதவைத்
தட்டும்போது
நீ
அடுத்த வீட்டிற்குப்
போய் விடுகிறாய்-’
என்று
ஒரு பொன்மொழி
உண்டு.
நான்
அதிர்ஷ்டத்தின்
வீட்டுக் கதவை
தட்டும் போதெல்லாம்
அது
தன்னுடைய
அடுத்த வீட்டிற்குப்
போய் விடுகிறதே !

# மனக்குரல்

பொய்மைப் பேய் மழையில்
போலிப் பயிர்களெல்லாம்
மெல்ல முளை விட்டுச்
செழித்து வளர்கையிலே
என்னுளத்தில் ஒன்று
ஏதோ முணுமுணுக்கும்

கயமைக் கொடு நெருப்பில்
கருணை மலர்களெல்லாம்
தங்கள் சுயமிழந்து
மெல்லக் கருகையிலே
என்னுளத்தில் ஒன்று
ஏதோ முணுமுணுக்கும்

சிறுமை எனுங் காற்றில்
சிந்தைக் கனிகளெல்லாம்
தங்கள் இடம் பெயர்ந்து
தனியாய் சிதறுகையில்
என்னுளத்தில் ஒன்று
ஏதோ முணுமுணுக்கும்

# சங்கமம்

காலங்கள் தோறும் நின்
நினைவுகள் மலரும்;
வாழ்க்கையின் கோடையில்
துயரங்கள் கருகும்;
கவலைகள் வாழ்வாகி
கலங்கிடும் வேளை
கனவாக உன்தோற்றம்
எழிலாக மலரும்.

என் கனவு என் நினைவு
உன்னோடு ஒன்றாகி
நானின்றி நீயாகி
நீயின்றி நானாகி
ஒன்றாகி உயிர்க்கொடியில்
பூவாகி மலரும்.
காலத்தின் இறவாத
கணங்களின் பிறப்பில்
வாடாத மலராக
வாழ்வில் நீ இருப்பாய்.

உனைத் தேடாத கணமெல்லாம்
துயராகிப் போக
துயரெல்லாம் கலைந்தோட
உன்னோடு தொடர்வேன்.
காலத்தின் அழியாத
கவிப்பூவே, உந்தன்
உணர்வான மணத்தோடு
ஒன்றாகிக் கலப்பேன்!

# கனவுப் பறவைகள்

ககனத்தின் சோலைகளில்
எத்தனையோ கனிமரங்கள்
எட்டிக், கனி பறிக்க
எண்ணிக் கை நீட்டுகிறேன் ...
எட்டும் கனிகளெல்லாம்
எட்டிக்காய் ஆகிறது –

கண்ணைக் கவருகின்ற
கவின்றன பொன்மலர்கள்
ஆசைக் கரம் நீட்டி
அடையத் துடிக்கின்றேன் ...
கையில் சருகான
ஓர் மலர்தான் கிடைக்கிறது –

நெஞ்சைக் கவருகின்ற
ஒப்பரிய சங்கீதம்
இன்னிசையைச் செவிகளிலே
தேக்க நினைத்தோடி வந்தேன் ...
நெஞ்சைப் பிசைந்தெடுக்கும்
ஒப்பாரி கேட்கிறது -

தென்றல் அழைத்துவரும்
நற் சுகந்த வாசனைகள்
மூக்கை உறிஞ்சுகிறேன் ...

பின்னே தொடருகின்ற
சாக்கடைதான் முன்னே
ஓடிவந்து நிற்கிறது -

வாழ்க்கைக் கனவுகளை
உன்னதமாய் நெஞ்சிருத்தி
உயரும் எண்ணங்களில்
உள்ளமதை ஈடுவைத்தேன் ...
ஊமைக் கனவாக்கி
உலகம் சிரிக்கிறது !

# கனவுகளின் புலம்பல்

நாங்கள் மேகங்களில்
தவழ நினைத்தோம் -
மண்ணில் கூட
நடக்க முடிந்ததில்லை.
நட்சத்திரங்களை
எண்ண நினைத்தோம் -
எண்ணிய எதுவுமே
நடந்தது இல்லை.
மலைகளின் உச்சியில்
உலாவிட நினைத்தோம் -
மண்ணில் கண்களின்
அழுகையில் நனைந்தோம்.
விண்ணில் பறவைகளின்
இறகுகளைத் தாங்கி
விரும்பும் பொழுதெல்லாம்
பறந்திட நினைத்தோம் -
மண்ணின் அழுக்குகளில்
காலுக்குச் செருப்பின்றி
நீண்ட நெடுந்தூரம்
நடந்து நடந் திளைத்தோம்!

*

எங்கள் நினைவுகளில் உலகம்
மிக இனிது;

எங்கள் நினைவுகளில் உலகம்
மிக அழகு;
ஆனல் நாம்
உண்மையில் தரிசித்ததோ
உலகின் ஒரு சிறிய
இருள் மூலை !

★

நாம் பாட நினைத்து
வாய் திறந்தால்
எம்மைச் சூழ உள்ள
கூண்டின் கம்பிகள்
எம்மை ஊமையாக்குகின்றன ...
நாம் ஆடவென்று
உடலசைத்தால்
அச்சுறுத்தும் பல விழிகள்
எம்மை விழுங்குகின்றன ...

★

உங்கள் உறக்கம்தான்
எங்கள் பிறப்பு
உங்கள் விழிப்புத்தான்
எங்கள் மரணம்

உங்கள் விழிப்பின் பின்னும்
எங்களுக்கு உயிரூட்ட
நீங்கள் பல வேளைகளில்
கொடுக்கும் விலை -
கண்ணீர் !

★

எங்களைச் சிறைப்படுத்தும்
கூண்டின் கம்பிகளை
உடைத்தெறிவதற்கு -
இயற்கையின் கரங்களுக்கு
வலிமை இல்லை ..
உங்களுக்கு நாங்களோ
நிறைவேறாத
கனவுப் பறவைகள் -
எங்களுக்கு நாங்களோ
கனவுகளின் கனவுகள் !

# மனித ஏணிகள்

நாங்கள் ஏணிகளாய்
இருந்தோம் பிறர் உயர -
பிறர் மேலே வருவதற்கு
ஏணிகளாய் நாமிருந்தோம்.
எம்மீது ஏறி மேலே சென்றவர்கள்
எம்மை மறந்தார்கள் -
எட்டி உதைத்தார்கள்.
ஒளியை எமக்கெல்லாம்
காட்டும் கடமையுளோர்
இருளை எமக்குப்
பரிசாகத் தந்தார்கள்.

★

தன்னந்தனி
இருட்டில்
தயங்கித் திசை மயங்கி
எண்ணித் தொலையாத
எத்தனையோ நெடுங்காலம்
வீழ்ந்து கிடந்தோம்
நாம்;
வீணில் பொழுதுகளை
மாய்த்துத் துயின்றோம்
நாம்
ஒளியை உணராது !
ஒளியை நாமுணர்ந்தால்
அவர்கள் தலைமுறைகள்
மேலே வருவதற்கு

ஏணிகளே இல்லையாம் ...
ஆ ! என்ன சுயநலம் !

★

எங்கள் தலைமுறைகள்
இருளில் புதைந்துவிட
என்றும் அனுமதியோம் -
என்றும் அனுமதியோம்
பிறர் மேலே வருவதற்கு
பயன்பட்ட நாங்களெல்லாம்
நாளை மேலே
வருவோம்
இது உறுதி.

'ஏணிகள்'
பிறர் மேலே வருவதற்கு
உழைப்பதல்லால்
தாமே மேல் வருவதுவும்
நடைமுறையோ?'

மேலே உள்ளவர்கள்
சிரிக்கும் ஒலி கேட்கிறது.
ஆனாலும்
நாளை
நாங்கள்
மேலே வருதல்
மிக உறுதி.
ஏனெனில்
நாங்கள் மர ஏணிகளல்ல -
மனித ஏணிகள் !

## 'உயர்' நியாயம்

மீட்டப் படாத வீணையின்
நாதமாய்
பேசப்படாத சொற்களின்
அர்த்தமாய்
சுவைக்கப் படாத கவிதையின்
நயங்களாய்
எங்கள் வாழ்க்கையின்
தேவைகள் யாவும்
எங்கள் மனங்களில்
மௌனமாய் உறைய
இதற்குக் காரணமான
நீங்களோ
வீணையில் நாதமும்
சொற்களில் அர்த்தமும்
கவிதையில் நயங்களும்
இல்லையாகச் சொல்லித் திரிவது
எந்த வகையில்
நியாயம் ?

# ஞானம்

கணந்தோறும் வாழ்க்கையின்
முடிவுகள் நெருங்கையில்
கனவான வாழ்வின் தோற்றம்
நிழலாகிச் சிரிக்கின்ற
நிர்ப்பந்த வேளையில்
நினைவுகள் கொஞ்சமல்ல.

எழிலான வாழ்க்கையின்
இயல்பான தோற்றங்கள்
இதயத்தின் மேலெழுந்து
முடிகின்ற வாழ்க்கையின்
ஆயிரம் அர்த்தமாய்
முனைப்புடன் வந்து நின்று,

முடிந்ததுன் கனவுகள்
முடிந்ததுன் நினைவுகள்
முடிந்தது முடிந்தது
என்று சொன்னால்
முடிவுகள் ஆரம்பமாகவும்
தோன்றலாம்.

o o o

## தேவை

பலாப்பழத்தின்
முட்களாக
நாங்களுமைக்
குத்தினாலும்
நீங்களெமை
விடமாட்டீர்.
ஏனெனில்
தேன் சுளைகள்
பல உள்ளே
இருப்பதனை
நீர் அறிவீர் !

★

## வாழ்க்கை

நல்லதோர் வீணையைப்
புழுதியில் எறிவதும்
சிதைவுற்ற வீணைக்காக
அழுவதும் துடிப்பதும்
உலகிற்கு விடிந்துள்ள
சாபமா என்ன ?

★

## பிறழ்ச்சி

இந்த உலகம்
இதன் நாகரிகக் கோலங்கள்
மானிட அடிமன
நினைவு வெளிப்பாடுகளா ?

★

# பசுமைப் புரட்சி

மாரிக்காலம் தொடங்கும் மாதம்
அட்டைகள்
ஊர்வலம் தொடங்கின;
நத்தைகள்
காலில் நெரிந்தன;
மழைக் கண்ணிகள்
ஓயாது இரைந்தன;
நடுக்கும் குளிர்
உடலை வாட்டியது;
ஆனால்,
மழையைத்தான்
இன்னும் காணோம்!

★

# கனவுகள்

கால்கள் மண்ணில்
துவள்கையிலே
எண்ணம் விண்ணைத்
தொடுகிறது.

# நியதி

மனிதச் சிறு மனங்கள்
மண்ணில் முளைக்கையிலே
மனத்தில் எழுகின்ற
எண்ணமெலாம் உன்னதமாய்
வானப் பெரு வெளியை
எட்டிப் பிடிக்கவென்று
ஏராளம் கனவுகளை
எண்ணிச் சிரிக்கிறது.

கண்ணை விழிக்கையிலே
கற்பனைகள் ஓடிவிட
மண்ணிற்குள் மீண்டும்
புதைத்துவிடும் காரணியாய்
வாழ்க்கை நியதிகளை
உலகம் வகுக்கிறது.

# பிரிவு

எங்கோ இருந்து
இன்னிசை கேட்கிறது
கண்ணுக்குத் தெரியாமல்
கானம் இசைக்கிறது
மெதுவாய் மிக மெதுவாய்
தேய்ந்து மிகக் குறைந்து
கேளா ஒலியாகி
மறைந்தே போகிறது.

## கணிப்பு

நானே நட்டு
நானே நீரூற்றி
பந்தலிட்டுப்
படரவிட்ட கொடியில்
ஒரு பூவுமில்லை
பிஞ்சுமில்லை -
வேலியோரம்
தானே முளைத்து
மண்ணில்
படர்ந்த கொடியில்
ஏராளமாகப்
பூவும் பிஞ்சுகளும் !

## மரணம்

அன்பின் நெகிழ்ச்சியில்
மனங்களின் இணைப்பினில்
மலரும் அன்பெனும்
மலர்களின் அந்திப்பொழுது ...

# மனிதத்துவம் ✓

மண் புழுவிற்கும் உண்டே ஆசை
விண்ணிலே பறக்க; ஆனாலும்
விண்ணிலே பறக்கும் பறவையின்
விரிந்த - அழகிய - நீண்ட - ஆமாம்
மிகவும் வெண்ணிய இறக்கைகளை
வெட்டி வீழ்த்தும் மனிதத்துவம்
மண் புழுவைப் பறக்க விடுமா ?

# போதனை ✓

அணைந்த அடுப்பை
மூட்டுதற்காக
விளக்கை எடுத்துப்
பற்ற வைத்தால்
அடுப்போடு சேர்ந்து
விளக்கும் அணைந்தது !

# கனவுப் பூக்கள்

எங்கள் மனம் காணுகின்ற
நிறைவேறாக் கனவுகள்தாம்
ஞாலச் செடிகளிலே
மலராய் மலர்ந்தனவோ ?



—* சிவம் *—



# அறிமுகம்

இருபத்தொரு வயது இளைஞரான கவிஞர் ''சிவம்'' 1967-ல் எழுத்துலகில் புகுந்தார். இவர் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை, புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, கொக்குவில் பல்தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் பழைய மாணவர்.

ஏழு ஆண்டுகளாக 'அம்புஜம்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிட்டு வந்த இவரது ஆக்கங்கள் ஜோதி, வெற்றிமணி, ஈழநாடு, மத்தாப்பூ, எழில், ரோஜாப்பூ, சிரித்திரன், கண்மணி, மல்லிகை, கலை அருவி, பூம்பொழில், இதயம், புதுயுகம், கலைக்கண், வெள்ளி, பூரணி, அணு, வானொலி மஞ்சரி ஆகிய பத்திரிகைகளில் அவ்வப்போது வெளியாகியுள்ளன. இலங்கை வானொலி நிகழ்ச்சிகளிலும் இவரது படைப்புக்கள் ஒலிபரப்பாகியுள்ளன.

கட்டுரை, நாடகம், சிறுகதை ஆகிய துறைகளிலும் ஈடுபாடுண்டெனினும் கவிதைத் துறையிலேயே அதிக பிரபலமடைந்துள்ளார். இவரது மெல்லிசைப் பாடல்கள் சில இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி வருகின்றன. பல கவியரங்குகளில் பங்கு கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

சிலகாலம் 'செங்கதிர்' என்ற அறிவியல் ஏட்டின் உதவி ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். 1973ம் ஆண்டில் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரித் தமிழ் மன்றம் வெளியிட்ட 'புதுவை' சஞ்சிகையின் இதழாசிரியர்களுள் இவரும் ஒருவர்.

மரபுக் கவிதைகளிலும் அதிகம் ஈடுபாடு கொண்ட இவரது மரபுக் கவிதைகள் பல அச்சேறக் காத்திருக்கின்றன.

# பொன்னலரிப் பூச்சொரிந்த புழுதித் தெரு

பொன்னலரிப் பூக்கள்
பூமியெங்கும் சொரிந்திருக்கும்
புழுதித் தெருவழியே
போய்க்கொண் டிருக்கின்றேன்.

பொன்னின் நிறமெடுத்துப்
பெருமரத்தின் உச்சியிலே
பூத்திருந்த பொன்னலரி
புழுதி மணல் வழியே
பூமியெங்கும் சொரிந்திருக்கும்
புழுதித் தெருவழியே
போய்க்கொண் டிருக்கின்றேன்.

மின்னல் தெறிக்கின்ற
வானப் பெருவெளியில்
ஊனம் எடுக்கின்ற
மழைநீர்த் துளி விரைந்து
புழுதி மணற்தரையில்
பூவாளி நீர் தெளித்து
மண் மணக்கும் வேளையில் அவ்
வாசனையை நான் நுகர்ந்து
புழுதித் தெருவழியே
போய்க்கொண் டிருக்கின்றேன்.

மஞ்சட் குருத்திடையே
மாம்பூக்கள் பூத்திருக்கும்;
மாமரத்தின் கொப்பிலிலே
குருவிச்சை படர்ந்திருக்கும் -

பாதை மருங்கினிலே
படர்ந்துள்ள மலர்க்கொடிகள்
வெண்பற்கள் காட்டி
நகை செய்யும் -

செம்மண் புழுதியினல்
சிவந்திருக்கும் மேனியுடன்
தமக்காக இல்லாது
வேருெருவர் நிலத்தினிலே
தாமுழைத்த துயரமுடன்
ஏருழவர் விரைந்திடுவர் -

வண்டிச்சுமை அழுத்த
வாயில் நுரைதிரள
முதுகில் பிரம்படியும்
மூக்கில் பிடிகயிறும்
வருத்தம் கொடுப்பதனல்
எருதுகளும் தாம் விரையும் -

செக்கச் சிவந்திருக்கும்
செம்மண் தரை கழுவி
ரத்தம் என வடிந்து
'ராப்பகலாய்' நீர்விரைந்த
வாய்க்கால் வழியாக
வரப்பினிலே கால் பதித்துப்
புழுதித் தெருவழியே
போய்க்கொண் டிருக்கின்றேன்.

ஓங்கி உயர்ந்திருக்கும்
மாளிகையின் மாடங்களில்
தேங்கி யிருக்கின்ற

செல்வத்தில் மிக மகிழும்
செல்வச் செருக்குடையோர்
முகம் தெரியும் வேளையிலே
மாளிகையின் கூரையினைத்
தாண்டி மிகவிரைந்து
வானில் நகர்ந்துவரும்
வண்ண நிலவினொளி
என்னில் படர்ந் தெனக்கோர்
எழுச்சியினை ஊட்டிவிட,

மெல்லப் புழுதிமணம்
மூக்கில் புகுந்துவரப்
பொன்னலரிப் பூக்கள்
பூமியெங்கும் சொரிந்திருக்கும்
அந்தப் -
புழுதித் தெருவழியே
போய்க்கொண் டிருக்கின்றேன் !

## அடிக்கல்

இன்று நான் செய்பவை
மிகமிகச் சிறியவை
என்று நான் அறிகுவேன்.
ஆயினும் -
நன்று நான் நாளைய
வாழ்வினில் செய்பவைக்கு
இன்றைய செயல்களே
அடிக்கல் !!

# பயணம்

நான்
அதலபாதாளத்திலிருந்து
மேலே வந்துகொண்டிருக்கிறேன்.
மேலேயிருந்து
உறுமும் சிங்கத்தின் ஓசையும்
உரோஞ்சும் கத்திகளின் ஒலியும்
கேட்டுக்கொண் டிருக்கின்றன.
துப்பாக்கிகளின் கூர் முனைகள்
என்னை நோக்கி நீளுவதும்
எனக்குத் தெரிகிறது.
ஆனாலும், நான்
மேலே மேலே வந்துகொண்டிருக்கிறேன்;
ஒருநாள் உச்சியை அடைந்துவிடுவேன்.

# ஜனனம் ✓

ஜலதரங்கக் கிண்ணங்களிலே
பன்னீர்விட்டு இசைக்கின்றபோது
எழுகின்ற இன்னிசை
சாக்கடை நீரை வார்த்தாலும்
ஒலித்தே தீரும்.

# தலையீடு

வளரும் இளைய
தலைமுறை யினரின்
வாழ்க்கைப் பாதை
வேகம் மிகுந்தது
எங்கள் வழியில்
தலையிடுவதற்கு
எவருக்கேனும்
உரிமைகள் இல்லை.
எவருக் கேனும்
தகுதியும் இல்லை.

நாங்கள் வளரும்
புதிய தலைமுறை.
எங்கள் பாதை
ஏற்றம் மிக்கது.
இடையே எம்மைக்
குறுக்கீடு செய்யும்
எவ்விதத் தடையும்
எங்கள் வலிய
கரங்களின் திறத்தால்
—ஒன்றிய எங்கள்
கரங்களின் பலத்தால்
நொறுக்கப்பட்டே
தீரும்!

# ஏகாந்தம்

எங்கே திரும்பிடினும்
மனிதப் பெருவெள்ளம்
என்றாலும் நான் எந்தன்
ஏகாந்தப் பெருவெளியில்
நிற்கின்றேன் !

இயந்திரங்கள் இயங்குவதும்
இதயங்கள் துடிப்பதுவும்
என்னருகே மிக அருகே
எனக்குத் தெரிகிறது.
என்றாலும் நான் எந்தன்
ஏகாந்தப் பெருவெளியில்
நிற்கின்றேன் !!

எந்தன் உளம் படைக்கும்
இன்கவிதைப் பண்அதனை
நானே முணுமுணுத்தல்
நன்றாக நானுணர்வேன்
என்றாலும் நான் எந்தன்
ஏகாந்தப் பெருவெளியில்
நிற்கின்றேன் !!!

# தலை(வர்) விதி

"எங்கள் தலைவிதியை
நாமே நிர்ணயிப்போம்
இறைவன் எங்கள்
எதிர்காலத்தை
நிர்ணயிக்க முடியாது"
என்று முழங்கிய
புரட்சித் தலைவர்
போகும் வழியில்
கோயில் உண்டியலில்
சில்லறை போட்டுச்
சென்றதும் ஏனோ ?

# கனவு

தனிமையில் உறங்கும் வேளை
தவித்திடும் உள்ளம் ஓயக்
கனிந்திடும் கனவில் காணும்
காட்சிகள் அவை, ஓ! இன்பம்!
கண்களே! இமைகள் நீக்கிக்
கனவினைக் கலைத்திடாதீர்!

# பிரபல்யம்

நாங்கள்
இருட்டில் இருக்கின்றோம்.
பிரகாசமான ஒளிவெள்ளம்
உங்களைச் சூழ்ந்துகொண்டிருப்பது
எங்களுக்குத் தெரிகிறது.
வெளிச்சத்திலிருக்கும்
உங்கள் கண்கள்
இருட்டிலிருக்கும்
எங்கள் வாழ்க்கையின்
மேடுபள்ளங்களைக்
காணமுடியாது.
ஆனால் -
இருட்டிலிருக்கும் நாங்கள்
உங்கள் வாழ்க்கையின்
உள்ளே நிகழ்கின்ற
ஒவ்வொரு நிகழ்ச்சியையும்
அவதானிக்க
உங்களைச் சூழ்ந்து
வெளிச்சம் போடும்
ஒளியின் வெள்ளம்
உதவுகிறது !

## அரசினரைப் பின்பற்றி...

"ஏனடா பரீட்சையில்
இத்தனை குறைவெ"ன
வினவிய தந்தைக்குத்
தனயன் கூறினன்
"எனக்கு மட்டுமல்ல
வகுப்பிலே எல்லா
மாணவர் களுக்கும்
குறைந்த 'றிசல்ற்'தான்"

## பேசிய வார்த்தைகள்

வில்லிலிருந்து
'விர்' என எழுந்த
அம்பு
பறவையை நோக்கிப்
பாய்ந்து செல்கையில்
"பாவம், பறவை!"
என்று நினைத்தால்
அம்பு திரும்பி
வந்து விடுமோ?

# எங்கள் அரசு

என்னிடம் உள்ளது
இரண்டே சட்டைகள்
இரண்டும் பழையவை
பலநாள் போட்டுப்
பார்த்துக் கழித்தவை.
இன்று -
அவற்றில் ஒன்றை
அணிந்ததனாலே
அனைவரும் என்னைக்
கேலி செய்தனர்.
நாளை -
மற்றைய சட்டையை
மாற்றிப் பார்ப்போம்
அதுவும் பழைய
கந்தலே எனினும்
என்ன செய்வது ?
உள்ளது இரண்டே
சட்டைகள் தானே !

## வீழ்ச்சி

ஆண்டவனின் திருமுடியில்
அலங்காரமாய் வீற்றிருந்த
அழகிய அந்த மலர்
மறுநாள் -
ஆலய வீதியைக்
கூட்டித் துடைத்த
வேலைக்காரியின்
கால்களுக் கடியில்
நசுங்கிக் கிடந்தது.

○ ○ ○

## போதனை

வெண் சுருட்டை
வாயில் வைத்து
நெருப்பை மூட்ட
விளக்கை நோக்கிக்
கடதாசி யொன்றைச்
சுருட்டி நீட்டினேன்.
நீட்டிய தாளில்
'புகைத்தல் தீது'
என்ற எழுத்துகள்
கருகி மறைந்தன.

# தர்மம்

தினசரித் தாள்களை
விற்றுக் கொண்டிருந்த
குருட்டு வியாபாரியிடம்
பணத்தைக் கொடுத்துப்
பத்திரிகை வாங்கிய
அந்தப் பெரியவர்
''மிச்சக்காசு
வேண்டாம் நீயே
வச்சிரு'' என்று
சொன்னதைக் கேட்டு
சுற்றிலும் நின்றவர்
வியப்புடன் பார்த்தார்.
செல்லாக் காசைச்
செலுத்திய மகிழ்வில்
சென்றுகொண் டிருந்தார்
அந்தப் பெரியவர்!!

# பீடிகை

''உங்கள் சஞ்சிகையின்
இலக்கிய சேவை
அளப்பரியது.
உங்கள் சஞ்சிகையின்
ஆயிரக்கணக்கான
வாசகர்களுள்
அடியேனும் ஒருவன்.
உங்கள் சஞ்சிகை
உலகம் உள்ளளவும்
வாழட்டும்''
என்று தொடங்கிய
கவிஞரின் கடிதம்
'' எனது கவிதையைப்
பிரசுரம் செய்க ''
என்று முடிந்தது.

## சுயநலம்

மூக்கினுள் நெளிந்த
புழுக்களை அகற்றக்
காக்கையின் உதவியைச்
நாடிய மாடு
உணவினை உண்ணும்
வேளையில் வந்த
காக்கையை முட்டித்
துரத்தியது.

## ✓நாகரிகம்

பன்னிரண்டை விட்டுப்
புறப்பட்ட மணிக்கம்பி
ஒன்று - இரண்டு
மூன்று - நான்கு
என்று நகர்ந்து
எத்தனையோ இடங்கண்டு
பன்னிரண்டில் மீண்டும்
வந்து நிற்கிறது.

# திறமை

வெற்றியை நோக்கி
நான் விரைவாக
நடந்துகொண்டிருந்தேன்.
பாதையின் குறுக்கே
பென்னம் பெரிய
பாறையைக் கண்டு
பயணம் நிறுத்திப்
பாதியில் மீண்டேன்.
ஆனால், அந்தத்
திறமை சாலியோ
அதே பாதையில்
சென்ற பொழுது
குறுக்கே கிடந்த
அதே பாறையைக்
கொத்திக் குடைந்து
படிகளை அமைத்துச்
சுலபமாகப்
பாதங்கள் வைத்து
ஏறி நடந்தான்.

*

## தெய்வமே !

ஓ ! தெய்வமே !
உலகத்தின் ஊழல்கள்
கொடுமைகளைக் காண்பதற்கு
சகிக்காமல்
நீ கண்களை
மூடிவிட்டாய்.
என்போன்ற ஏழைகள் ... !
பாவம், என்செய்ய ?

## தொல்லை

''எலித்தொல்லை மிகவும் மோசம்
ஏதேனும் செய்யுங்கள்''
என்ருள் என் மனைவி.
பெட்டைப்பூனை
ஒன்றைக் கொணர்ந்தேன்.
அது
குட்டி போட்டுப்
பல்கிப் பெருகிக்
குடும்பம் வளர்த்தது.
''பூனைத்தொல்லை மிகவும் மோசம்
ஏதேனும் செய்யுங்கள்''
என்கிருள் என் மனைவி ...!
... ... ... ?

## காதல்

நான் பறிக்க விரும்பிய
ரோஜா மலரைச் சுற்றி
கூரிய முட்கள்
வேலியிட்டிருக்கின்றன.
ஆனாலும் -
நான் அந்த மலரைப்
பறிக்க வேண்டும் -
மணக்கவும் வேண்டும் !

## பிரதட்சணம்

கோவில் வீதியினை
மூன்று முறை
சுற்றிவிட்டேன்.
ஆனாலும் -
இன்னும் மூன்றுமுறை
சுற்றவேண்டும்.
அந்த -
அழகிய பெண்
இப்போதுதானே
வீதிசுற்ற
ஆரம்பிக்கிறாள் !

## இடமில்லை

நான் எழுதிய
நாலுவரிக் கவிதையைப்
பிரசுரம் செய்ய
இடமில்லையென்று
சொன்ன அந்தப்
பத்திரிகை ஆசிரியர்
எம். பீ. ஒருத்தர்
விடுத்த அறிக்கையை
- நாலுபக்க அறிக்கையை -
அவசரமாகப்
பிரசுரம் செய்தார்.

○○

## நியதி

உதிர்ந்து சருகாகி
மண்ணில் கிடக்கின்ற
வாடிய மலர்கள்,
புதிய மலர்களின்
எழில்மிகு கோலங்களின்
வாழ்வுத் தடங்களை
நெஞ்சில் பதிக்கின்றன.

## அழிவும் பிறப்பும்

சுவரில் தொங்கிய
நாட்காட்டியொன்றில்
நாட்கள் நகர்ந்திடத்
திகதிகள் கிழிந்தன.
தேய்ந்து தேய்ந்து
அழிந்து ஒழிந்து
போய்முடிந்தன
அனைத்தும்.
அடுத்த நாளில் -
அந்தச் சுவரில் ஓர்
புதுக் கலண்டர்
தொங்கியது.

□

## தூக்கம்

உறங்கும் போதில்
உறைந்து கிடக்கும்
துன்பச் சுமைகள்
துயரம் யாவும்
தூக்கம் கலைந்தால்
மீண்டும் எழுமே!!

## ஒழுக்கம்

ஒரு சமூகப் பிரமுகருக்கு
விழா எடுத்துக் கொண்டாடிய
கூட்டத்தில்
ஓர் அன்பர் பேசுகிறார்;
"எங்கள் தலைவர்
ஏழை எளியவர்களுக்கு
அள்ளி வழங்கும்
உத்தமர்" என்று.
உடலால் பிழைக்கும்
'உத்தமி' ஒருத்தி
கூட்டத்தில் நின்று
குசுகுசுக்கின்றாள்
"எனக்கும் நன்றாய்
அள்ளித் தருபவர்"

## பிரிந்த சொற்கள்

பிரிந்த உதடுகள்
மொழிந்த சொல்லுகள்
பிறகு எம்மிடம்
திரும்பி வந்திடா !
பிரிந்த சொற்கள் நம்
சுதந்திரத்தினைப்
பிரித்தெடுத்திடும்
வலிமை கொண்டவை !

# தியாகம்

தாமரை மலர்ந்து
வானத்தை நோக்கித்
தன் எழிற் கோலம்
அர்ப்பணிக் கிறது.
புற்களும் செடிகளும்
மௌனமாக
பூமாதேவிக்குத்
தம்மையே
அர்ப்பணிக் கின்றன.



# கவிதை

நாளும் பொழுதும்
கடலலைகள் கரையினிலே
ஏதோ கவிதைகளை
எழுதி ... எழுதி ...
மறுபடியும் மறுபடியும்
அழித்துக் கொண்டே
இருக்கின்றன.

# பிரிவு

அந்த ஒரு நீண்ட காலை வேளையில் -

- அது மிகவும் நீண்டதாகத்தான்

எங்களுக்குத் தோன்றியது -

நாங்கள் இருவரும்
சந்தித்துக் கொண்டோம்.
அந்த இனிய தோழரை
நான் சந்தித்ததால் தான்
அந்தக் காலை வேளை
அப்படி நீண்டதோ ?

- அவரும் அப்படித்தான்

கருதியிருப்பார் -

என்னை அவர் சந்தித்த
அந்த இனிய காலை
மௌனமான இளவெயிலை எறித்து ...
மரஞ்செடி கொடிகளை
இளந்தென்றல் தழுவ ...
மென்மையான புற்றரையின் மீது
வெண்பனித் துளிகள்
மிளிர்ந்து தோன்ற
புன்னகை சிந்தியது.

இன்று -
மிகமிக நீண்ட

- அன்றிலும் பார்க்க
அதிகம் நீண்ட -
( அப்படியாக
எமக்குத் தெரிந்த ) -

இன்றைய காலையில்
இருவரும் மீண்டும்
சந்தித்தபோது
இனிமை இருக்கவில்லை.

- இன்பம் இருந்தும்
இல்லையென்பது போல்
எங்கள் மனத்தில்
தோன்றியிருக்கலாம் -

மிகமிக நீண்ட
இன்றைய காலையில்
வானம் வெளுத்து
வரண்டு கிடந்தது.
புற்றரை யெல்லாம்
கருகிக் கிடந்தது.

- நண்பரின் கண்கள்
கலங்கியிருப்பது
எந்தன் கண்களில்
மிகவும் தெரிந்தது -

நாங்கள் இன்று
பிரிவதற்காக
மீண்டும் இணைந்தோம்.
நீண்ட காலையில்
இணைந்த இருவரும்
இன்றைய இந்த
மிகமிக நீண்ட
இருண்ட காலையில்
பிரிந்து சென்றோம்!!

## பழையன கழிதல்

நேற்று மலர்ந்து
நிறைவளித்த நன்மலர்கள்
இன்று நிலத்தில்
விழுந்து மடிவதும்
இன்று மலர்ந்த
இனிய மலர்,
நாளை வாடி உதிர்வதும்
இந்த உலகில்
நிகழ்கின்ற ஒரு
வழக்கு.

## வடிவங்கள்

கழிகின்ற காலத்தைக்
கணியாது இதயத்தில்
பிழிகின்ற கனிச் சாற்றில்
புரண்டுருளும் வேளையிலே
பொழிகின்ற வடிவங்கள்
மலர்க்கவிதைக் குவியல்கள் !

## வேளை

ஓ ! என் அன்பே !
நீ வருகின்ற வேளைகள்
நினைவில் வரும்போது
இன்பமூட்டுகின்றன.
என்றாலும் -
நீ வருகின்ற
அந்த
வேளைகளை அடுத்தே
நீ போகின்ற
வேளைகளும் வரும் என்ற
நினைவுகள் -
நெஞ்சத் தடத்தில்
துன்பத்தை
ஏற்படுத்துகின்றனவே !

## தனிமை

எங்கோ தொலைவினிலே
இதயத்தைத் தொட்டிழுக்கும்
ஏகாந்தக் குயிலோசை
என் காதில் விழுகிறது.
இங்கே என் மனத்தினிலே
எழுகின்ற தாபத்தின்
இன்னோர் பிரதி அது
என்றெனக்குத் தோன்றுவதேன்?
தனிமை இதயத்தின்
தாபத்தை வெளிக்கொணரத்
தவிக்கின்ற குயிலோசை -
துடிக்கின்ற மனவோலம்
கனிகின்ற என்னிதயத்
தனிமையதன் கவலைகளை
வெளிக்கொணரத் துடிக்கின்ற
கவிதைச் சிதறல்கள்.

## பிரசவ மரணம்

இதயத்தின் மூலைகளில்
இருண்டுள்ள பகுதிகளில்
புதையுண்ட நினைவுகளைப்
பிறப்பிக்க நினைக்கின்ற
பிரசவத்தின் வேதனையில்
பெரும்பாலும் மரணங்கள்!

# நன்றிகள்

அச்சுகள் செய்து
அழகுற அமைத்தவர்
விளம்பரம் தந்து
வசதிகள் செய்தவர்
விலைக்கு இச் சிறுநூல்
வாங்கிய அன்பர்
கவிதைகள் படித்து
மகிழ்ந்தவர்;
விமர்சகம் செய்யும்
வித்தகர்;
அனைவரும் எங்கள்
அன்பினுக் குரியர்.
நன்றிகள் பலவும்
அவர்க்கே உரியன.

'சிரித்திரன்', 'மல்லிகை',
'கலசம்', 'அணு',
'பொறிகள்' ஆகிய
சஞ்சிகை, நூல்கள்
இவையும் எங்கள்
நன்றிக்குரியன.

சிறந்த புகைப்படங்களைக்
குறைந்த செலவில் எடுப்பதற்கும்,

துரித முறையில்
அழகிய 'புளொக்'குகளைச் செய்வதற்கும்

சிறந்த இடம்,

# கொழும்பு ஸ்ரூடியோ

ஸ்ரான்லி றேட், — யாழ்ப்பாணம்.

சிறந்த சித்திகளை அளிக்கும்

## ஸ்கந்தா கல்வி நிலையம்

'கனவுப் பூக்க'ளை
வாழ்த்துகிறது,

P. பரராஜசிங்கம் (Director)

## ஸ்கந்தா கல்வி நிலையம்

(மகளிர் கல்லூரிக்கு அருகில்)
தபால் நிலைய வீதி,
சாவகச்சேரி.

# 'மல்லிகை'

ஈழத்த இலக்கியம் என்ற
தேசிய எழுச்சிக்காக
மாதந்தோறும் வீறுநடைபோடுகிறது.

தொடர்ந்து படியுங்கள்.

# 'மல்லிகை'

**234 A, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்,**

---

## தரன் ஸ்ருடியோ

படப்பிடிப்பாளர்களு'ம்,
சில்க்ஸ்கிறீன் போஸ்ரல் அச்சிடுபவர்களும்.

துரித சேவையில்
அழகிய 'றபர் சீல்' தயாரிப்பாளர்கள்.

- சினிமா சிலேட்ஸ்
- லேபல் டிசைன்ஸ்
- விளம்பர போட்ஸ்
- புளொக்ஸ்

தயாரிப்பாளர்கள்.

# தரன் ஸ்ருடியோ

9, நவீன சந்தை, ( மேல்மாடி )
யாழ்ப்பாணம்.

ஈழத்துச் சஞ்சிகை உலகில்,

இணையில்லாத ஏடுகள்!

சிரிப்புக்கு ஒரு...

## "சிரித்திரன்"

சிறுவர்க்கு ஒரு...

## "கண்மணி"

இன்றே சந்தாதாரராகுங்கள்.

விபரங்கட்கு:

**122, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

அழகிய புகைப்படங்களுக்குச்
சிறந்த ஸ்தாபனம்,

# சரவணாஸ் ஸ்ருடியோ

அச்சுவேலி.